# இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான 60 வருட இராஜதந்திர உறவு: தந்திரோபாயக் கூட்டாண்மை - ஒரு மீளாய்வு

த. கிருஷ்ணமோகன்

**ஆய்வுச்சுருக்கம் :**

*இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து சீனாவுடன் சமாதான சகவாழ்வு தத்துவத்தினடிப்படையில் பரஸ்பர உறவினை வளர்த்து வந்தாலும், 1957 ஆம் ஆண்டு தொடக்கம் இராஜதந்திர உறவினை வளர்த்து வருகிறது. இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவு ஆரம்பிக்கப்பட்டு (1957 - 2017) அறுபது வருடம் நிறைவடைகிறது. சீனக்குடியரசு மக்கள் சீனக் குடியரசாக மறுஅவதாரம் எடுத்த காலத்தில் அதனை இலங்கை அங்கீகரித்துக் கொண்டதுடன், நிலைத்திருக்கும் அபிவிருத்திக்காக இரண்டு நாடுகளும் இணைந்து பணியாற்றி வந்துள்ளன. சிறிய பெரிய நாடுகள் பரஸ்பரச் சமத்துவம், நட்புறவு, பரஸ்பர நன்மைக்கான கூட்டுறவு என்பவற்றை நூற்றாண்டு கடந்து மதித்துப் பேணிவருவதற்கு இரு நாடுகளும் சிறந்த உதாரணமாகும். கடந்த அறுபது வருடங்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு சர்வதேச அதிகார ஒழுங்கு மாற்றத்திற்கு ஈடுகொடுத்து உறுதியாகவும், ஆரோக்கியமாகவும் நிலைத்திருக்கிறது. முப்பது வருடங்களாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் 2009 ஆம் ஆண்டு இலங்கை வெற்றிபெறுவதற்குச் சர்வதேச நாடுகளுடன் இணைந்து சீனா பலமான உதவிகளை வழங்கியது. உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னர் தேசக்கட்டுமானத்திற்காகக்குறைந்த வட்டியிலான நீண்டகாலக் கடன்கள், முதலீடுகளை இலங்கைக்குச் சீனா வழங்கி வருகிறது. தொடர் உள்கட்டுமானத் திட்டங்களான நுரைச்சோலை நிலக்கரி மின்நிலையம், கொழும்புத் துறைமுக புதிய கொள்கலன்களைக் கையாளும் மையம், கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய அதிவேக நெடுஞ்சாலை, ஹம்பாந்தோட்டைத் துறைமுக மேம்படுத்தல், தெற்கு அதிவேக நெடுஞ்சாலை போன்றன இலங்கையின் சிதைவடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பச் சீனா வழங்கிய உதவிகளுக்கான சில உதாரணங்களாகும். இரண்டு நாடுகளும் இணைந்து கொழும்புத் துறைமுக நகரக் கட்டமைப்பினை உருவாக்கி வருகின்றன. கைத்தொழில்மையமாக இலங்கையினை புதிப்பிப்பதற்குச் சீனா ஆழமானதொரு அத்திவாரத்தை இட்டுள்ளது. இரண்டு நாடுகளுக்கும் வெற்றி என்னும் கோட்பாட்டினடிப்படையில் கடந்த பல வருடங்களாக சீனா முன்னெடுத்துவரும் பட்டுவீதிப் பொருளாதாரக் கட்டமைப்பிற்கு இலங்கை தனது முழுமையான ஆதரவினை வழங்கி வருகிறது. இருபத்தியொராம் நூற்றாண்டில் சீனாவினை மையப்படுத்திய உலகப் பொருளாதாரச் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான பட்டுவீதிப் பொருளாதராத் திட்டத்திற்கு இலங்கை வழங்கும் ஆதரவு இருநாடுகளுக்குமிடையிலான தந்திரோபாயக் கூட்டுப் பங்காளர் உறவிற்கும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கும் ஏற்ற எதிர்காலத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது.*

**திறவுச்சொற்கள் :** இராஜதந்திர உறவு, இந்துசமுத்திரப் பிராந்தியம், கப்பல் போக்குவரத்து, உள்நாட்டுப் பாதுகாப்பு, உள்நாட்டு யுத்தம்.

அறிமுகம்

பூகோள அமைதி மற்றும் உறுதியைப் பேணுவது போன்று, தெற்காசியாவிலும் அமைதி, சமாதானம், உறுதியைப் பேணுவதே சீனாவின் கொள்கையாகும். தெற்காசியாவில் அமைதி, சமாதானம்நிலைபெறஇந்துசமுத்திரப் பிராந்தியத்தின் மையத்திலுள்ள இலங்கையில் அமைதி, சமாதானம் நிலவவேண்டும் என்பதே இலங்கை தொடர்பான சீனாவின் கொள்கையாகும். மேற்குத்தேச நாடுகளின் கட்டற்ற வாணிபவாதம் ஆரம்பமாகிய காலத்திலிருந்து இலாப நோக்கிலான வர்த்தகக் கப்பல் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பட்ட இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கை அதிகம் கவரப்பட்டிருந்தது போன்று இருபத்தியொராம் நூற்றாண்டில் சீனாவின் வர்த்தக, இராணுவ மற்றும் தந்திரோபாய நலன்களுக்காகச் சீனாவின் இலங்கை அதிகளவில் கவரப்பட்டுள்ளது. இதனால் கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கையில் நடைபெற்று உள்நாட்டு யுத்தம் இலங்கைக்கும் சீனாவிற்குமிடையில் மிகவும் ஆழமான நட்புறவினை வளர்த்துள்ளது.

இலங்கையில் அமைதியை உருவாக்குவதற்காக உள்நாட்டு யுத்தத்திற்குத் தேவையான பொருளாதார, ஆயுத தளபாடங்கள், இராணுவ கூட்டுச்செயற்பாடுகள் மற்றும் இராணுவப்பயிற்சிகள் போன்ற அனைத்து உதவிகளையும் சீனா வழங்கியது. மேலும் உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னரான மீள்கட்டுமானப் பணிகளுக்கும், மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கும் சீனா உதவிவருகிறது. இலங்கையின் வெளிவிவகாரச் செயற்பாட்டில் சீனா பெரும் பங்காற்றி வருவதுடன், தனது நலன் கருதி இலங்கையில் அமைதியும், நிலைத்திருக்கும் பொருளாதார அபிவிருத்தியும் ஏற்பட உதவிவருகிறது. இலங்கையின் இனமோதலுக்கான காரணங்களுக்கு அரசியல் ரீதியான தீர்வு வழங்காது இலங்கையில் நிலைத்திருக்கும் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது என்ற யதார்த்தத்தை சீனக் கொள்கை வகுப்பாளர்கள் விளங்கிக்கொண்டுள்ளதுடன், இலங்கையின் இனமோதலுக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை ஆர்வப்படுத்தியும் வருகிறது. சமாதான சகவாழ்வு, பரஸ்பர இருதரப்பு உதவிகள், பரஸ்பரம் நன்மை தரக்கூடிய கூட்டுறவு, காலத்திற்கு ஏற்றவகையில் பலப்படுத்தப்படும் இருநாட்டு மக்களுக்கிடையிலான நட்புறவு போன்ற வழிகாட்டும் தத்துவங்களின் அடிப்படையில் அறுபது வருடங்களாக (1957-2017) இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவு தொடர்ந்து நீடித்து வருகின்றது. ஆயினும், இருபத்தியொராம் நூற்றாண்டில் இலங்கையுடனான இராஜதந்திர உறவில் சீனா செலுத்தி வரும் அக்கறையானது அரசியல் நலன் சார்ந்ததும், தந்திரோபாய நோக்கிலானதுமாகும். இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவு மாறிவரும் சர்வதேச சூழலுக்கு ஏற்ப வளைந்து கொடுத்து முன்னோக்கிச் செல்வதுடன், கடந்த அறுபது வருடங்களாக இருநாடுகளும் சிறந்த நண்பர்களாக, சிறந்த பங்காளர்களாக, பரஸ்பரம் நம்பிக்கை கொண்டவர்களாக நீடித்திருப்பதற்குப் பொருத்தமான இராஜதந்திரத்தை வகுத்து வருகின்றன. இவ்வகையில் உள்நாட்டு யுத்தத்திற்கு முன்னரும், பின்னரும் இரு நாடுகளுக்கும் இடையில் நிலவிய இராஜதந்திர உறவின் பண்புகள் எத்தகையது?, உள்நாட்டு யுத்தகாலத்தில் இருநாடுகளுக்குமிடையில் நிலவிய இராஜதந்திர உறவின் நெருக்கம் எத்தகையது?, உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் இலங்கையில் பொருளாதார உறுதியையும், அபிவிருத்தியையும் உருவாக்குவதற்குச் இருநாடுகளும் எத்தகைய தந்திரோபாயத்தை வகுத்துள்ளன? போன்ற வினாக்களுக்கு விடைகாணும் பகுப்பாய்வாக இவ் ஆய்வுக்கட்டுரை உள்ளது. இவ் ஆய்வு பண்புரீதியான அணுகுமுறையூடாகச்

செய்யப்படுவதுடன், இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான உறவு தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள், சஞ்சிகைகள், தொடர்புசாதனங்களின் பகுப்பாய்வுகள் போன்ற இரண்டாம் தர ஆய்வு இலக்கியங்களை மீளாய்வு செய்வதனூடாகச் செய்யப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்குத் தேவையான இரண்டாம் நிலைத்தரவுகள் அனைத்தும் சர்வதேசளவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ள இலத்திரனியல் நூலகங்களில் இருந்து தரவிறக்கம் செய்து பயன்படுத்தப்பட்டுள்ளன.

**1. வரலாற்றில் தடம்பதித்த நிகழ்வுகள்**

வரலாற்றுக்காலம் தொடக்கம் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் பௌத்த சமயம் மற்றும் கலாசாரம் சார்ந்த உறவுகள் வளர்ந்து வந்துள்ளன. 1949 ஆம் ஆண்டு மக்கள் சீனக் குடியரசை மாவோ சேதுங் உருவாக்கிய போது அதனை விரைந்து அங்கீகரித்த (1950) நாடுகளுள் இலங்கையும் ஒன்றாகும். 1952 ஆம் ஆண்டு இலங்கையும் சீனாவும் அரிசி-இறப்பர் வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதுடன், இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவுகள் படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கியது. ஆனாலும், இருநாடுகளுக்குமிடையிலான உத்தியோகபூர்வ இராஜதந்திர உறவுகள் 1957 ஆம் ஆண்டு மாசி மாதமே ஆரம்பமாகியது. 1960 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா தனது முதற்கட்டப் பதவிக்காலம் முடிவடையும் காலத்தில் மேற்கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் வர்த்தகச் செயற்பாடுகளை அரசவுடமையாக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் இலங்கைக்கான உதவிகளை இடைநிறுத்தியிருந்தன. இதற்கு மாற்றுவழியாகக் கம்யூனிச நாடுகளாகிய சீனா மற்றும் ரஸ்சியாவுடன் இலங்கை தனது இராஜதந்திர உறவினை விரிவாக்கியது (Waidyanatha W.G.S :2001). 1963 ஆம் ஆண்டு இலங்கையும் சீனாவும் கடல்வழித் தொடர்பிலான வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன (Diven:2016). இவ்ஒப்பந்தம் இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் சீனா தனது கடலாதிக்கத்தை விஸ்தரிப்பதற்கான முயற்சியாக இந்தியாவினாலும், மேற்குத்தேசங்களினாலும் அப்போது பார்க்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டு இருநாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை 1965 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிதனது அரசாங்கஎதிரப்புத்தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டது. தேர்தல் வெற்றியின் பின்னர் மேற்குத்தேசச் சார்பு வெளியுறவுக் கொள்கையினை வகுத்துக் கொண்டதுடன், இராஜதந்திர ரீதியான சீன விரோதப்போக்கினையும் பின்பற்றியது. 1971 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையில் சீனக்குடியரசு (Republic of China) என்னும் பெயரில் சீனாவிற்கு இருந்த சட்டபூர்வ உரிமத்தை மக்கள் சீனக்குடியரசு (People's Republic of China) என்ற புதிய பெயருக்கு மாற்றுவதற்குச் சமர்பிக்கப்பட்ட பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்படுவதற்கு 1970 ஆம் ஆண்டு மீண்டும் பதவிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் தனது ஆதரவினை வழங்கியிருந்தது (United Nations General Assembly Resolution 2758:1971). இலங்கைக்கு இரண்டு தடவைகள் (1957 மற்றும் 1964) விஜயம் செய்திருந்த சீனப் பிரதம மந்திரி # என்லாய் (Zhou Enlai) இடதுசாரி மனோபாவம் கொண்ட மக்கள் விடுதலை முன்னணி (JVP) இலங்கையில் மேற்கொண்ட புரட்சியை கண்டனம் செய்திருந்ததுடன், இலங்கைக்கான தனது ஆதரவினையும் தெரிவித்திருந்தார். 1972 ஆம் ஆண்டு இலங்கையின் பிரதமமந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். இது சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் புதிய திருப்புமுனையினை ஏற்படுத்தியிருந்ததுடன், பல்வகை உதவிகள், வர்த்தகம், ஆயுத

இறக்குமதிக்கான ஒப்பந்தங்கள் இலங்கைக்கும் சீனாவிற்குமிடையில் கைச்சாத்திடப்படவும் உதவியது. இவ்விஜயத்தின் பின்னர் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபம் சீனாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டது (Kelegama:2014). *1975* ஆம் ஆண்டு இலங்கைக்கான மிகப்பெரிய ஏற்றுமதி நாடாக சீனா மாறியது. *1977* ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மேற்கு நாடுகளுடன் தனது பொருளாதாரக் கூட்டுறவினை உருவாக்கியிருந்தாலும், சீனாவிடமிருந்து இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கான பல உதவிகளைப் பெற்றுக் கொண்டது. அரசியல் நலன்கள் எதுவுமின்றி இருநாடுகளுக்குமிடையில் நட்புறவினைப் பேணுவதற்கும், பலப்படுத்துவதற்கும் இலங்கை-சீன சமுதாயம் என்னும் அமைப்பு *1981* ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. *1982* ஆம் ஆண்டு இலங்கை-சீன இணை வர்த்தக குழு, இலங்கை-சீன பொருளாதார வர்த்தகக் கூட்டுறவுக்குழு என்பவைகளை உருவாக்குவதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன (Kelegama:2014). *1986* ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சீன ஜனாதிபதி லீ ஸியானியன் (Li Xiannian) இலங்கையின் இனமோதலுக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியதுடன், இலங்கைக்கான ஆயுத விநியோகம் தொடர்ந்து நடைபெறும் என்பதையும் வலியுறுத்தியிருந்தார். *1987* களில் இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையிலான உறவு சிக்கலடைந்திருந்த காலத்தில், இலங்கையின் உள்விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு தொடர்பாகச் சீனா வெளிப்படையாகக் கண்டனம் தெரிவித்திருந்ததுடன், குறிப்பிடத்தக்களவிலான ஆயுதங்களையும் இலங்கைக்கு வழங்கியிருந்தது. *1990* களில் இருநாடுகளுக்குமிடையிலான வர்த்தக ரீதியிலான உறவு குறைவடைந்திருந்தாலும், *1991* ஆம் ஆண்டு சிறியளவிலான உதவிகளையும், பாரியளவிலான ஆயுத விநியோகத்தையும் வழங்கியிருந்தது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்சா ஆட்சிக் காலத்தில் *(2005-2015)* இருநாடுகளுக்குமிடையிலான அரசியல், பொருளாதார, இராணுவ உறவுகள் மிகவும் ஆழமானதாகவும், பலமானதாகவும் இருந்ததுடன், இலங்கை - சீன இராஜதந்திர உறவின் மைல்கல்லாகவும் இருந்தது எனக் கூறலாம்.

## 2. இராஜதந்திர உறவுகள்

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் நிலவும் உறுதியான நல்லுறவு சிறிய நாடு ஒன்றிற்கும் பெரிய நாடு ஒன்றிற்கும் இடையில் சிறப்பான இராஜதந்திர நல்லுறவினைப் பேணமுடியும் என்பதற்குச் சிறந்த உதாரணமாகும். இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு, சமாதானம், உறுதிப்பாடு என்பவற்றை ஆதரித்து வந்த சீனா, *2002* ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினை வரவேற்றிருந்தது. *2006* ஆம் ஆண்டு இலங்கையும் சீனாவும் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவு கடந்த தசாப்தத்தில் வலுவடைந்து விரிவாக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது (Joint Press Communiqué of the Foreign Ministers of China and Sri Lanka:2006.07.16). இதனை எதிர்கால இருதரப்பு உறவில் ஏற்படக்கூடிய விரிவாக்கத்தினை வெளிப்படுத்தக்கூடிய அளவுகோலாகக் கருதமுடியும். இலங்கையின் ஜனாதிபதி சீனாவிற்கு மேற்கொண்ட அனைத்து விஜயங்களிலும் இரு நாடுகளுக்குமிடையில் உள்ள உறவின் ஆழம், பலம், பிராந்திய, சர்வதேச விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடியதுடன், நீண்டகாலமாக இலங்கையுடன் சீனா பேணிவந்த நட்புறவினைத் தொடர்ந்தும் பேணுவதற்குத் தனது அரசாங்கம் விரும்புவதாகவும், எல்லா

விடயங்களிலும் கூட்டிணைந்து செயற்பட விரும்புவதாகவும் தெரிவித்திருந்தார் (Xi Jinping Meets with President Mahinda Rajapaksa of Sri Lanka:2014.05.22). இது தொடர்பாகக் கோட்டாபய இராஜபக்ச பின்வருமாறு கூறியிருந்தார்.

> "ஜனாதிபதி மகிந்த இராஜபக்ச மூன்று தடவைகள் சீனாவிற்கு விஜயம் செய்துள்ளார். நான் ஐந்து தடவைகள் சென்றுள்ளேன். சில வேளைகளில் ஜனாதிபதி தொலைபேசியில் சீனப் பிரதமருடன் பேசியுள்ளார். நாம் நல்லதொரு நட்புறவினை உருவாக்கியுள்ளோம். எங்களுக்கு யார் முக்கியம் என்பதைப் புரிந்து வைத்துள்ளோம்" (Sergei DeSilva-Ranasinghe: 2009).

2006 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிளுக்குமிடையில் மீண்டும் பேச்சு வார்த்தை ஆரம்பமாகிய போது அதனை மீண்டும் வரவேற்றிருந்த சீனா, இலங்கையின் உட்கட்டுமானத் துறையின் திருத்தப்பணிகளுக்கு உதவி செய்வதற்குத் தான் தயாராக இருப்பதாக அறிவித்திருந்ததுடன், இலங்கையில் தேசிய அரசியல் உறுதியைப் பேணுவதற்கும், மோதல் நீக்கம், பொருளாதார அபிவிருத்திக்கும் சீனா ஆதரவாக இருப்பதாக அறிவித்தது. 2007 ஆம் ஆண்டு இலங்கையின் ஜனாதிபதி மகிந்த இராஜபக்சா சீனாவிற்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் பின்னர் இலங்கையின் இனமோதலை மேற்கோளாகக் கொண்டு இருதரப்பும் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில்,

> "பயங்கரவாதம், பிரிவினைவாதம், தீவிரவாதம் ஆகிய மூன்று தீங்கு விளைவிக்கக்கூடிய சக்திகளை எதிர்த்து போராடுவதற்குக் கூட்டாகச் செயற்படுவதுடன், பயங்கரவாதச் செயற்பாட்டிற்கு எதிராகச் சர்வதேச பிராந்திய மட்டங்களில் இணைப்பினையும், ஆலோசனைகளையும் உருவாக்குதல் வேண்டும்" (Joint Press Communique of the People's Republic of China and the Democratic Socialist Republic of Sri Lanka:2007.03.10).

எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

பயங்கரவாதம், பிரிவினைவாதம், தீவிரவாதம் ஆகிய தீய சக்திகளை இல்லாதொழிப்பதற்காக 2007 ஆம் ஆண்டு சித்திரை மாதத்திலிருந்து சீனா மீண்டும் இலங்கைக்கு இராணுவ ஆலோசனைகளையும், ஆயுத உதவிகளையும் வழங்கியது. 2007 ஆம் ஆண்டு இராஜதந்திர உறவின் இறுக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் சீனா- இலங்கை நட்புறவின் ஐம்பதாவது ஆண்டுநிறைவு விழா அமைந்தது. அத்துடன் 2009 ஆம் ஆண்டிற்கும் 2015 ஆம் ஆண்டிற்கும் இடையில் பல்வேறுவகையான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிப்படையாகத் தலையிடாதிருக்கும் கொள்கையினைச் சீனாபின்பற்றியிருந்ததுடன், ஏனைய நாடுகளின் தலையீடுகளை வன்மையாகக் கண்டித்தும் வந்தது. இலங்கையின் இறைமை, சுயாதிபத்தியம்,தன்னாதிக்கம் சர்வதேசளவில் மதிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கையின் இனமோதலுக்கு அரசியல் தீர்வு காண்பது இலங்கையின் உள்விவகாரமாயினும், இலங்கையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் சந்தர்பங்களில் சீனா விரைந்து உதவிவழங்கும் என்பதே இலங்கை தொடர்பான சீனாவின் கொள்கை எனக் கூறலாம். இவைகளுக்கும் மேலாக, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டிருந்த யுத்தத்தினைத் தடுப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை சீனா தனது வீட்டோ (Veto) அதிகாரத்தினைப்

பயன்படுத்தித் தடுத்திருந்தது. மேலும் 2009 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையும், மனித உரிமைகள் ஆணைக்குழுவும் (UNHRC) இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்களைச் சுமத்திய போது, உள்நாட்டு யுத்தமான து இலங்கையின் உள்விவகாரம், அது சர்வதேசப் பாதுகாப்பிற்கு எவ்விதத்திலும் ஆபத்தானதல்ல என்பது சீனாவின் கருத்தாக இருந்தது. யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளுக்குச் சீனா எப்போதும் இலங்கை சார்ந்தே வாக்களித்து வருகின்றமையை அவதானிக்கலாம். எனவே கடந்த அறுபது வருடங்களாக இருநாடுகளும் தமது இராஜதந்திர நட்புறவு, மற்றும் புரிந்துணர்வுகளை உயர்மட்டத்தில் பேணிவந்துள்ளன எனக்கூறலாம்.

### 3. உள்நாட்டுப் பாதுகாப்பு உதவிகள்

இலங்கையின் இனமோதலை இலங்கையின் உள்விவகாரமாகச் சீனா கருதி வந்தாலும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையின் முக்கியத்துவம் கருதியும், ஆசியப்பிராந்திய வல்லரசு என்ற வகையிலும் இலங்கையின் உள்நாட்டுப் பாதுகாப்பிற்குத் தேவையான ஆயுத தளபாடங்களை விற்பனை செய்து வந்ததுடன், உயர்மட்ட இராணுவப் பயிற்சிகளையும் வழங்கியது. இவ்வகையில் இலங்கைக்கான பிரதான ஆயுத விநியோகத்தராகச் சீனா உள்ளது எனலாம். 1984 ஆம் ஆண்டு புதியரக இராணுவத் தளபாடங்களை இலங்கைக்கு விற்பனை செய்யச் சீனா உடன்பட்டுக் கொண்டது. இதனடிப்படையில் 1984 ஆம் ஆண்டிலிருந்து தாக்குதல், தற்பாதுகாப்பு இராணுவத் தளபாடங்களை இலங்கைக்கு சீனா வழங்கி வந்துள்ளது. ஆனால் இக்காலப்பகுதியில் இருநாடுகளுக்கிடையிலான இராணுவப் பரிமாற்றம் அல்லது இரு நாடுகளும் இணைந்து கூட்டு இராணுவப் பயிற்சிகளில் ஈடுபட்டிருக்கவில்லை. சீனாவின் பிரதான ஆயுத உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாகிய நொறிங்கோ (North Industries Corporation-Norinco) 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரை தனது ஆயுதகளஞ்சியம் (Warehouse) ஒன்றை காலியில் உருவாக்க சீனாவும் இலங்கையும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டன. இக் களஞ்சியத்திலிருந்து மிகவும் குறுகிய நேரத்தில் இலங்கை இராணுவம் சமர்பிக்கும் மனுக்கோரலினூடாக ஆயுதங்கள் விற்பனை செய்யப்பட்டன. இக்காலப் பகுதியில் ஏறக்குறைய 130 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்கள் விற்பனை செய்யப்பட்டன. 2007 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவும், இந்தியாவும் இலங்கைக்கான இராணுவ உதவிகளை தற்காலிகமாக இடைநிறுத்திய போது சீனா குறிப்பிடத்தக்களவு இராணுவத் தளபாடங்களை இலங்கைக்கு விற்பனை செய்தது. 2007 ஆம் ஆண்டிலிருந்து சீனாவின் பிறிதொரு ஆயுத உற்பத்தி நிறுவனமாகிய Poly Technologies இதே பணியை இலங்கைக்குச் செய்து வந்தது. இக்காலப் பகுதியில் ஏறக்குறைய 200 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்கள் விற்பனை செய்யப்பட்டன. (Jonas Lindberg, Camilla Orjuela, Siemon Wezeman and Linda Åkerström: 2011). 2008 ஆம் ஆண்டு அண்ணளவாக ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இராணுவத் தளபாடங்களைச் சீனா இலங்கைக்கு விற்பனை செய்திருந்தது. Jian-7 யுத்த விமானங்கள், விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள், JY-11 3D விமானக்கண்காணிப்பு ராடர்கள் போன்ற யுத்தக்கருவிகள் இதில் முக்கியம் பெற்றிருந்தன (International Crisis Group:2011). அதேநேரம் 200 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்களின் இறக்குமதிக்கான மனுக்கோரலை 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததால் நிறுத்தியிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தில் இலங்கை வெற்றியடைவதற்கு

இவ்வாயுதங்கள் உதவியாக இருந்துள்ளன. சீனா வழங்கிய ஏவுகணைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பலமான கட்டிடங்கள், பாதுகாப்பு அரண்களைத் தகர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. வரையறையற்றுக்கிடைத்தசீனாவின் இராணுவ உதவியானது யுத்தத்தினை வெல்லமுடியும் என்ற பெரும் நம்பிக்கையினை இலங்கைக்கு வழங்கியிருந்தது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட இலங்கை அரசாங்கம் இறுதியுத்தத்தில் வெற்றியடைந்தது. இலங்கை தனது உள்நாட்டு யுத்த வெற்றியை அறிவித்தவுடன் அதனை உடனடியாகச் சீனா வரவேற்றும் கொண்டது. இந்தியாவின் எச்சரிக்கையினையும் மீறி இலங்கை அரச படைகளுக்குச் சாதகமான இராணுவச் சமனிலை என்னும் பெயரில் சீனா வழங்கிய இராணுவ உதவிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின்சட்டபூர்வமற்றஅரசினை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதற்குப் பயன்பட்டதுடன், அவர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஏறக்குறைய 5594 சதுரக் கிலோமீற்றர் நிலப்பரப்பினை இழப்பதற்கும், இறுதியில் ஏறக்குறைய 85 சதுரக் கிலோமீற்றர் நிலப்பரப்புள்ள காட்டிற்குள் அவர்கள் முடக்கப்பட்டு அழிக்கப்படுவதற்கும் உதவியது எனலாம்.

1985 ஆம் ஆண்டு சீனாவின் கடற்படைக் கப்பல் முதல்தடவையாகக் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்திருந்தது. 2007 ஆம் ஆண்டு பங்குனி மாதம் பாகிஸ்தான் கடற்படையுடன் இணைந்து பலதரப்புக் கூட்டுக் கடற்பயிற்சியில் ஈடுபட்ட பின்னர் சீனாவின் இரண்டு கடற்படை அணிகள் (Frigates) கொழும்புத் துறைமுகத்தில் தரித்துவிட்டுச் சென்றிருந்தன (Jamestown: 2010.07.22). 2009 ஆம், 2010 ஆம் ஆண்டுகளில் சீனாவின் கடற்படைக் கப்பல்கள் எரிபொருள் மீள்நிரப்புதலுக்காக கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்திருந்தன (Jamestown:2011). 2012 ஆம் ஆண்டு ஆவணிமாதம் 29 ஆம்திகதி ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியங் குவாங்லி (Liang Guanglie) இலங்கை வந்திருந்தார். சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு மேற்கொண்ட முதல் விஜயம் இதுவாகும். இதன்போது அவருடன் இணைந்து 23 உயர் அதிகாரிகள் வருகை தந்திருந்தனர். இலங்கை மீது சீனாவிற்குள்ள உச்சமட்ட நலன்களை எடுத்துக்காட்டும் நிகழ்வாகவே இதனைச் சர்வதேச இராஜதந்திரிகள் கருதியிருந்தனர். இலங்கை வந்திருந்த சீனப்பாதுகாப்பு அமைச்சர் குழு இலங்கையின் பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதியுமாகிய மகிந்த இராஜபக்சா மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோர்களைச் சந்தித்ததுடன், இலங்கையின் பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய முக்கியமான பல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார். இருநாட்டுப் பாதுகாப்பு அமைச்சர்களின் சந்திப்புத் தொடர்பாக இலங்கை வெளியிட்ட அறிக்கையில் "இரு நாடுகளுக்கிடையில் நட்புறவினையும், சமாதானத்தினையும் பேணுவதற்கான சம்பிரதாயபூர்வமான சந்திப்பு" (h;ariharan.R: 2012.09.11) எனத்தெரிந்தது. ஆயினும் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருக்கும், சீனாவின் பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பின் பின்னர் இரு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில் "இலங்கையும், சீனாவும் இருநாட்டு இராணுவ உறவுகளை இறுக்கமாகப் பலப்படுத்துவதற்கு இது பரஸ்பரம் உதவும்" (h;ariharan.R: 2012.09.11) எனக் கூறப்பட்டிருந்தது. அதேநேரம் சீனாவின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில்

> "இது இருநாடுகளுக்கும் இடையிலான அரசியல் நம்பிக்கை, பல்வேறு துறைகள் சார்ந்த ஒத்துழைப்பு, பரிமாற்றம்,

விஸ்தரிப்பு என்பவைகளுடன் கூடிய ஆழமான நட்புறவாகும். பிராந்திய சமாதானம், உறுதித்தன்மை, அபிவிருத்தி என்பவைகள் தொடர்பாக எழும் பிரச்சினைகளைக் கையாளுவதில் இருநாடுகளும் திறமையுடனும், பொறுப்புடனும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். மரபு சாராத பாதுகாப்பு விடயங்களில் கூட்டுறவுடனும், இறுக்கமான பரிமாற்றத்துடனும் செயற்பட வேண்டும். இரு நாடுகளும் நெருக்கமான நட்பினைப் பேணுவதற்கு மிகவும் கடுமையாக உழைக்க வேண்டும்" (h;ariharan.R: 2012.09.11) எனக் கூறப்பட்டிருந்தது.

இருநாடுகளின்பாதுகாப்பு அமைச்சும்இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்குத் தெற்காசிய நாடுகளை ஒன்றிணைத்து பாதுகாப்பு இராணுவ ஒத்திகையொன்றினை இலங்கையின் கடற்பிராந்தியத்தில்நடாத்தத்திட்டமிட்டன. இதன் முதற்கட்டமாக

இதனை இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் வாகரைக் கடல் பிரதேசத்தில் *2012* ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் *10* ஆம் திகதி தொடக்கம் *25* ஆம் திகதி வரையும் சீன மக்கள் இராணுவத்தின் தலைமையில் கூட்டு இராணுவ ஒத்திகையொன்று (Joint Services Exercise "Cormorant III") நடாத்தப்பட்டது. இந்த இராணுவ ஒத்திகையில் இலங்கை, பாக்கிஸ்தான், வங்காளதேசம், மாலைதீவுகள் ஆகிய தெற்காசிய நாடுகள் கலந்துகொண்டன. இவ் இராணுவ ஒத்திகையில் இந்தியா பங்கெடுக்க மறுத்திருந்ததாயினும், சீனப்பாதுகாப்பு அமைச்சர் லியங் குவாங்லி (Liang Guanglie, 2008-2013) இந்தியாவிற்கு மேற்கொண்ட உத்தயோகபூர்வ விஜயத்தின் பின்னர் இவ் ஒத்திகையில் பார்வையாளராகக் கலந்து கொள்ள இந்தியா உடன்பட்டது (h;ariharan.R: 2012.09.11). ஒரு வகையில் இது மிகவும் சுவரஸ்சியமான நிகழ்வாகும். ஏனெனில் தெற்காசிய நாடுகளின் இராணுவக் கூட்டு ஒத்திகையொன்றின் மூலம் தெற்காசியாவில் திடீரென நுழையும் எதிரியை சீனா எவ்வாறு முறியடிக்கும் என்பதை இந்தியா பார்வையிட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் தெற்காசிய நாடுகளுக்கு இராணுவ, பொருளாதாரத் தலைமைத்துவத்தினைச்சீனா வழங்கத் தயாராகிவிட்டது என்றசெய்திசர்வதேசஅளவில்பகிரப்பட்டுள்ளது. *2014* ஆம்ஆண்டு புரட்டாதி மாதம் இலங்கை வந்திருந்த சீனாவின் ஜனாதிபதி ஷீ ஜின்பிங் (Xi Jinping, 2012) இலங்கை ஜனாதிபதி மகிந்த இராஜபக்சாவுடன் இணைந்து நடாத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு, கூட்டுறவு, வர்த்தகம்தொடர்பான முடிவுகளை எடுத்திருந்தனர். இம்முடிவுகளுக்கான பலதரப்புப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இரண்டு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில் இரண்டு நாடுகளும் பாதுகாப்பு மற்றும் கடல் பாதுகாப்புக் கூட்டுறவினை உருவாக்குதல், பாதுகாப்புடன் தொடர்புடைய விஞ்ஞானத் தொழில் நுட்பம்; இராணுவக் கல்விசார் உத்தியோகத்தர்கள் பரிமாற்றம் போன்றவற்றைப் பலப்படுத்துவதற்கு உடன்பட்டுக் கொண்டன.

*2016* ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் *12-15* ஆம் திகதி வரையில் பீஜிங்கில் நடைபெற்ற இரண்டாவது இலங்கை சீனா பாதுகாப்புக் கூட்டுறவு மகாநாட்டில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த பாதுகாப்புக் கூட்டுறவு ஏற்பாடுகள் முழுமையாக மீளாய்வு செய்யப்பட்டன. உயர்மட்டப் பரிமாற்றங்கள் உட்பட கூட்டு இராணுவப்

பயிற்சிகள், பாதுகாப்புடன் தொடர்புடைய பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகளில் பங்குபற்றுதல், புலனாய்வுக் கூட்டுறவு, இராணுவ உதவிகளும் பயிற்சியும் போன்ற பாதுகாப்புக் கூட்டுறவுடன் தொடர்புடைய விடயங்கள் முழுமையாக இருதரப்பினராலும் மீளாய்வு செய்யப்பட்டன. இம் மகாநாட்டின் இறுதியில் 2.6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளை இலங்கை பெறுவதற்கான ஒப்பந்தத்தில் இலங்கையும் சீனாவும் கைச்சாத்திட்டன (ColomboPage: 2016.10.17). இளம் இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவக் கல்வியாளர்களுக்கு இடையிலான பரிமாற்றம், கடற்படைகளுக்கிடையிலான கூட்டுறவினை உயர்நிலையில் பேணுதல், பிராந்தியப் பாதுகாப்புக் கூட்டினை முன்நோக்கி நகர்த்துதல் போன்றவற்றின் ஊடாக இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்துவதன் மூலம் பிராந்தியத்தின் அமைதி, உறுதி மற்றும் கௌரவத்தைப் பாதுகாக்க இரண்டு நாடுகளும் திட்டமிட்டுள்ளமை தெளிவாகின்றது. இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவின் பலத்தினைத் தாங்கி நிற்கும் முக்கிய கோபுரமாக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு கூட்டுறவு ஏற்பாடுகள் உள்ளன. இரண்டு நாடுகளினதும் இராணுவத்திற்கு இடையிலான உறவானது இருநாடுகளுக்குமிடையிலான ஏனைய இருதரப்பு உறவுகளுக்கான அடித்தளத்தினை மேலும் பலப்படுத்தியுள்ளது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது நலன் கருதி சீன மக்கள் இராணுவம் இலங்கையின் பாதுகாப்பிற்கும், இராணுவத்தின் வளர்ச்சிக்கும் பக்கபலமாக இருக்க விரும்புவது தெரிகிறது.

**4. தந்திரோபாயக் கூட்டுப்பங்காளர் உறவு**

இலங்கைக்கு 1957 ஆம் ஆண்டு தொடக்கம் பலசந்தர்ப்பங்களில் அனர்த்தங்கள், மனிதாபிமான மற்றும் வர்த்தகப் பொருளாதார அபிவிருத்திக்கான உதவிகளை சீனா வழங்கி வந்துள்ளது. 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதம் இலங்கையினை சுனாமிப் பேரலை தாக்கிய பின்னர், இவ்இயற்கை அனர்த்தத்திலிருந்து இலங்கை மீள்வதற்கு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை சீனா மனிதாபிமான உதவியாக வழங்கியிருந்தது. 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களின் நலன்களைப் பேணுவதற்கு 1.0 மில்லியன் அமெரிக்க டொலர்களை மனிதாபிமான உதவியாக வழங்கியது. 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கும் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை மனிதாபிமான உதவியாகச் சீனா வழங்கியிருந்தது. இதேபோன்று இருநாட்டிற்குமிடையிலான வர்த்தக உறவில் இலங்கைக்கான பொருட்களை ஏற்றுமதி செய்யும் பிரதான வர்த்தகப் பங்காளர் வகிபங்கினை சீனா நீண்டகாலம் வகித்து வந்துள்ளது. வரலாற்றில் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உறவு மகிந்த இராஜபக்சா ஆட்சிக் காலத்தில் மிகவும் உயர்நிலையிலிருந்தது. இலங்கை 2000ஆம் ஆண்டு சீனாவின் ஹான்கோ நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், முத்துராஜவல, கொலன்னாவ போன்ற இடங்களில் எண்ணெய் குதங்களை அமைத்து சீனா பராமரித்து வருகின்றது (Mahdi Darius Nazemroaya:2009).

சீனாவின் பட்டுவீதித் திட்டத்தில் துறைமுகங்கள், விமானப் படைத்தளங்கள், தந்திரோபாய கட்டமைப்புகளும் உள்ளடக்கப்பட்டு வேகமாக நவீனமயப் படுத்தப்படுகின்றன. சீனாவின் பிரதான தரைப்பகுதியிலுள்ள கடற்பிரதேசத்திலிருந்து தென் சீனக்கடலிலுள்ள கடலோரப்பகுதி, மலாக்கா நீரிணை, இந்து சமுத்திரப் பிராந்தியம், அராபியக்கடலிலுள்ள கடலோரப்

பகுதி, பாரசீகக்குடா ஊடாக பட்டுவீதித் திட்டத்தின் ஒருபகுதி விஸ்தரிக்கப்படுகின்றன. சீனாவிலிருந்து மத்திய கிழக்கு வரையில் கடல்வழித் தொடர்புகளை உருவாக்கும் திறனை விருத்தி செய்து சீனா தந்திரோபாய உறவுகளை கட்டமைத்து வருகின்றது (Christopher:2006).இதன் ஒரு பகுதியாகவே இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட "நகர் உறவு நட்புற வினை ஸ்தாபித்தல்" (Establishment of Friendship City Relationship) என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் சீனாவின் உதவியுடன் அம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்திக்கானஉட்கட்டுமான வசதிகளைக் கட்டமைக்கத் திட்டமிடப்பட்டது. இவ் அபிவிருத்தி வலயத் திட்டத்தின் கீழ் துறைமுக வசதிகளைக் கட்டுதல், குதப் பண்ணை, (Tank farm) நிலக்கீழ்சேமிப்பறை (Bunker) வசதிகளை ஏற்படுத்துதல் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அம்பாந் தோட்டையில் புதிய துறைமுகம் ஒன்று கட்டப்படுகிறது. இதற்கான முதலீட்டில் 85மூ த்தை சீனா செய்துள்ளது. இத்திட்டத்திற்கான முதலீடு நான்கு கட்டங்களாகப் பிரித்து மேற்கொள்ளப்படுவதுடன், பதினைந்து வருட காலத்திற்குள் இத்திட்டம் பூரணமாக்கப்பட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இவ் வேலைத் திட்டத்தின் முதற்கட்டப் பணி 2007 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. இத்துறைமுகத் திட்டத்திற்குள் கைத்தொழில் பொருட்களை ஏற்றி இறக்கக்கூடிய 1000 மீற்றர் நீளமுடைய இறங்குதுறை, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், எரிவாயுவில் இயங்கக் கூடிய மின்னிலையம், கப்பல் தரிக்குமிடம், கப்பல் எரிபொருள் நிரப்பு நிலையம், விமானங் களுக்குத் தேவையான எண்ணெய் சுத்தி கரிப்பு நிலையம், சேமிப்பு நிலையம், பெற்றோலிய வாயுவினைத் திரவமாக்கும் நிலையம் என்பவற்றை உள்ளடக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது (Christopher:2006). அம்பாந்தோட்டை அபிவிருத்தி வலயம் பின்வரும் தந்திரோபாய நோக்கங்களைக் கொண்டதாகும்.

1. இங்கு உருவாக்கப்படும் ஆழ்கடல் துறைமுகமானது சீன வர்த்தக கப்பல்கள், கொள்கலன் கப்பல்கள், எண்ணெய், எரிவாயு ஏற்றிச் செல்லும் கப்பல்கள் இந்து சமுத்திரத்தில் செயற்படும் அணு சக்தியிலான நீர்மூழ்கிக் கப்பல்கள் உட்பட்ட இராணுவ கப்பல்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்.
2. அபிவிருத்தி வலையம் ஊடாக இலத்திர னியல் முறைமையை சீனாவினால் உருவாக்க முடியும். இவ் இலத்திரனியல் வலைப்பின்னல் முறைமையூடாக இந்து சமுத்திரப்பிராந்தியத்தில்இராணுவ, சிவில் போக்குவரத்தினை மேற்பார்வையிடவும், டிக்கோகாசியாவிலுள்ள அமெரிக்க இராணுவத் தளத்திலிருந்து மேற்கொள்ளப்படும் இலத்திரனியல் செய்திப் பரிமாற்றங்களையும், இந்தி யாவின் அணுசக்தி வல்லமையினையும் மேற்பார்வை செய்ய முடியும்.
3. அம்பாந்தோட்டை அபிவிருத்திவலயம் சீனாவிற்கு விண்வெளியினை மேற் பார்வையிடுவதற்கான தந்திரோபாய மையமாகவும் செயற்பட முடியும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் கப்பல்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் அமெரிக்காவின் யுத்த விமானங்கள், ஏவுகணைகள் என்பவற்றிலிருந்து சீனாவினைப் பாதுகாப்பதற்கான மையமாகவும் செயற்பட முடியும்.
4. சீனாவின் மீன்பிடிக் கப்பல்களை பாது காத்தல், புலனாய்வு கடமைகளைச் செய்தல் போன்றவற்றிற்கான தயார் நிலையினை அம்பாந்தோட்டையிலிருந்து மேற்கொள்ள முடியும்.

இலங்கையின் அம்பாந்தோட்டையில் உருவாகும் துறைமுகம் முழுமையான வர்த்தக நோக்கிலானது எனசீனாவலியுறுத்திவந்தாலும், அனேக இந்திய, அமெரிக்க இராணுவத்

திட்மிடலாளர்களைப் பொறுத்தவரை சீனாவின் பட்டுவீதித் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இது கருதப்படுகின்றது. எனவே அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவின் எதிர்கால வர்த்தகச் செயற்பாட்டிற்கும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனா தந்திரோபாய நிலைப்பாட்டினை எடுப்பதற்கும் இது மிகவும் பொருத்தமான இடமாகும் என்ற கருத்து சர்வதேசளவில் வலுப்பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இலங்கையின் நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு சீனா வரையறையற்ற வகையில் பங்களிப்புச் செய்து வருகிறது. 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கான நீண்ட காலக் கடன்கள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை வழங்குகின்ற பிரதான நாடுகளில் சீனா முதலிடத்தைப் பெற்றுள்ளது. சீனாவின் வெளிநாட்டு நேரடி முதலீடு நீண்டகால தந்திரோபாய நோக்கிலானதாகும். 1971 ஆம் ஆண்டிற்கும் 2012 ஆம் ஆண்டிற்கும் இடையில் சீனா 5.056 பில்லியன் அமெரிக்க டொலர் மெறுமதியான உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதில் 4.7 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிகள் ஜனாதிபதி மகிந்த ஜிராஜபக்சா ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டதாகும் (Sri Lanka Guardian: 2016.05.15). சீனா 2010 ஆம் ஆண்டு உதவி நன்கொடையாக 828.9 மில்லியன் அமெரிக்க டொலரினையும், 2014 ஆம் ஆண்டு உதவி நன்கொடையாக 308.92 மில்லியன் அமெரிக்க டொலரினையும் இலங்கைக்கு வழங்கியது (Bhatia:2016.04.24). 2010 ஆம் ஆண்டு இலங்கையில் 4.1 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வெளிநாட்டு நேரடி முதலீட்டினை சீனா மேற்கொண்டிருந்தது. உலக நாடுகள் 2014 ஆம் ஆண்டு 894 மில்லியன் அமெரிக்க டொலர் (World Investment Report: 2016) பெறுமதியான வெளிநாட்டு நேரடி முதலீட்டினை இலங்கையில் மேற்கொண்டிருந்தன. இதில் 403.5 மில்லியன் அமெரிக்க டொலர் (Bhatia:2016.04.24) பெறுமதியான நேரடி முதலீட்டினைச் சீனா மேற்கொண்டிருந்தது. இது 2014 ஆம் ஆண்டு இலங்கைக்கு கிடைத்த மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 45% மாகும். நீண்ட காலமாக இலங்கைக்கான பாரிய நிதி வழங்குனராக இருந்த யப்பானை பின்தள்ளிய சீனா 2014 ஆம் ஆண்டு இலங்கைக்கான பாரிய நிதி வழங்குனராக மாறியது. இவற்றுள் 2011 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கொழும்புத் துறைமுக தெற்கு கொள்கலன் மையம், 2014 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் போன்றன முக்கியமானவைகளாகும். கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் 2014 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இரு நாட்டு ஜனாதிபதிகளாலும் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்காக 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீட்டினைச் செய்வதற்கு சீனா தயாராக இருந்தது (The Economics Times :2016.04.05). ஆயினும் 2015 ஆண்டு பதவியேற்ற ஜனாதிபதி மைத்திரபால சிறிசேனா அரசாங்கம் இத்திட்டத்தை இடைநிறுத்தியிருந்தது. இத்திட்டத்திலுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் ஊழல்கள் தொடர்பான விடயங்கள் சீர்செய்யப்பட வேண்டும் என்பது புதிய அரசாங்கத்தின் கருத்தாக இருந்தது. 2016 ஆம் ஆண்டு சித்திரை மாதம் சீனாவிற்கு விஜயம் செய்த பிரமதமந்திரி ரணில் விக்கரமசிங்க இலங்கையின் சட்டத்திற்குட்பட்ட கொழும்புத்துறைமுக நகரம் விசேட நிதி மற்றும் வர்த்தக நகரமாக விசேட அந்தஸ்த்துடன் உருவாக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ஆம் திகதி நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு சீனத் தூதுக்குழு ஒன்று இலங்கை வந்திருந்தது. இத்தூ

துக்குழுவிற்கு சீனாவின் தேசியக்காங்கிரஸ்சின் தலைவர் வூ பங்குவோ (Wu Bangguo) தலைமை தாங்கியிருந்தார். சீனத் தூதுக்குழுவின் தலைவருக்கும் இலங்கை ஜனதிபதிக்கும் இடையில் பதினாறு ஒப்பந்தங்கள் 2012 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 17 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டன (Ministry of Foreign Affairs Sri Lanka: 2012.09.19). இவற்றில் பெரும்பாலான திட்டங்கள் அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களாகும். போக்குவரத்திற்கான உள்கட்டுமான அபிவிருத்தி, உல் லாசப்பி ரயாணத் துறை, தொலைத் தொடர்பு அபிவிருத்தி, துறைமுக அபிவிருத்தி, கொழும்பு தாமரைக் கோபுரத் திட்டம் (Lotus Tower) கைத்தொலைபேசிகளுக்கான நான்காம் தலைமுறை (4G) அலைக்கற்றை வலைப்பின்னல் விஸ்தரிப்பு, அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தியின் இரண்டாம் கட்டத்திற்கான நிதியுதவி, சக்திவள அபிவிருத்தி, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சர்வதேசக் கற்கைநெறி நிலையத்திற்கான தொழில்நுட்ப உதவிகள் என்பன உட்பட பல்வேறு திட்டங்கள் உள்ளடங்கியிருந்தன. இதனைவிட கடல் மற்றும் கரையோரக் கூட்டுறவு, நிதிக் கூட்டுறவு ஆகிய இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் இரு நாடுகளும் கைச்சாத்திட்டுக்கொண்டன (ColomboPage: 2012.09.18). இவ் ஒப்பந்தங்கள் மகிந்த இராஜபக்சாவின் கனவாகிய இலங்கையினை ஆசியாவின் அதிசயமாக்குவது என்பதை நனவாக்க உதவும் எனசீனா கூறிதுடன் இலங்கை மீது சீனா வைத்துள்ள நம்பிக்கைக்கு மேலும் வலுவூட்டுவதாக அமைந்தன. மேலும் சீனாவினை ஆசியாவின் வல்லரசாக மாற்றும் வகையில் இவ் ஒப்பந்தங்கள் அமைந்துள்ளதாகவும் சீனா கருதியது. எனவே சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான மேற்படி ஒப்பந்தங்களின் மூலம் இலங்கையின் எதிர்கால உள்நாட்டுப் பாதுகாப்பினைச் சீனா பொறுப்பேற்று உறுதிப்படுத்தியுள்ளது எனக் கூறலாம்.

சீனாவின் புதிய ஜனாதிபதியாக 2013 ஆம் ஆண்டு பங்குனி மாதம் பதவியேற்ற சூஷி ஜின் பிங் (Xi Jinping) தெற்காசியப் பிராந்தியத்தில் இலங்கையுடன் சீனாவிற்கு நீண்டகாலமாகத் தொடரும் உறவிற்குப் புத்தூக்கம் கொடுப்பதற்கு முயற்சித்தார். சீன ஜனாதிபதியின் அழைப்பினை ஏற்று இலங்கை ஜனாதிபதி மகிந்த இராஜபக்சா 2013 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 26 ஆம் திகதி நான்கு நாட்கள் சீனாவிற்கு விஜயம் செய்தார். இலங்கை ஜனாதிபதி ஒருவர் சீனாவிற்கு மேற்கொண்ட ஆறாவது உத்தியோகபூர்வ விஜயமாக இது பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஒருவகையில் இருநாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர வரலாற்று உறவினை இது மேலும் பலப்படுத்தியது எனக் கூறலாம். சீன ஜனாதிபதி சூஷி ஜின்பிங் மற்றும் இலங்கை ஜனாதிபதி மகிந்த இராஜபக்ஸ ஆகிய இருவருக்கும் இடையில் சீனாவின் மக்கள் மகா மண்டபத்தில் (Great h;all of the People) 2013 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 28 ஆம் திகதி இருதரப்புப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையின் பின்னர் இருநாட்டுத்தலைவர்களும் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் நிலவி வரும் உறவினைத் தந்திரோபாயக் கூட்டுப் பங்காளர் (strategic cooperative partnership) உறவாகத் தரமுயர்த்தி இருநாட்டு மக்களுக்கும் நன்மை தரக்கூடிய பொதுவான அபிவிருத்தியில் கவனம் எடுப்பது எனத் தீர்மானித்தனர் (Asian Tribune, 2013.06.05). மாற்றமடைந்து வரும் சர்வதேசச் சூழலைப் பயன்படுத்தி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்து வருவதுடன், பெரும் எண்ணிக்கையில் சர்வதேசச் சந்தைகளும் வளர்ந்து வருகின்றன. இந்நிலையில் இலங்கையுடன் இணைந்து பணியாற்ற சீனா விரும்புவதாக (Asian Tribune, 2013.06.05) சீன ஜனாதிபதி சூஷி ஜின் பிங் தெரிவித்திருந்தார். இருதரப்பு உறவினடிப் படையில் நீண்டகால அபிவிருத்திக்காகச்

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவினைத் தந்திரோபாயக் கூட்டுப்பங்காளர் உறவாகத் தரமுயர்த்திப் பெருமைப்படுத்தப் பின்வரும் விடயங்களை இருநாட்டுத் தலைவர்களும் தெரிவு செய்து கொண்டனர் (Asian Tribune, 2013.06.05).

1. உயர்மட்டத் தொடர்பினைப் பேணுவது, மிகவும் நெருக்கமான அரசியல் தொடர்பினைப் பேணுவது, பிரதேச ஒருமைப்பாடு, இறைமை, சுதந்திரத்தைப் பாதுகாத்தல் என்பவைகளுக்காக இருதரப்பும் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருத்தல், இருநாடுகளும் தமது தேசிய சூழலுக்குப் பொருத்தமான அபிவிருத்திப் பாதைகளைத் தெரிவு செய்வதுடன் நல்லாட்சி அனுபவங்களைப் பரிமாறிப் பலப்படுத்துதல்.
2. இருதரப்பு வர்த்தகம், முதலீடுகளை விஸ்தரித்தல், முதலீடு மற்றும் நிதிக் கூட்டுறவின்மூலம்வர்த்தகச்செயல்திறனை விரைவுபடுத்துதல், விவசாயத்துறையில் வெளிப்படையான கூட்டுறவு, விண்வெளித் தொழில்நுட்பத்தில் அதிக கவனம் செலுத்துதல் என்பவைகளுடன், இலங்கையின் போக்குவரத்து உட்கட்டமைப்பு நிர்மாணத்துறையில் சீனாவின் ஈடுபாட்டினை இரு நாடுகளும் வரவேற்றுக் கொண்டன.
3. சட்டங்களை அமுல்படுத்துதல், நாட்டின் பாதுகாப்பு மற்றும் இராணுவம் ஆகிய துறைகளில் கூட்டுறவுடன் இணைந்து செயற்படுதல், தீவிரவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதம் ஆகிய தீய சக்திகள் நடாத்தும்எல்லைகடந்தகுற்றச்செயல்கள், போதைப் பொருள் வர்த்தகம் உட்பட அனைத்துச் செயல்களையும் இல்லா தொழிப்பதற்கு ஒன்றாகப் பணியாற்றுதல்.
4. இருநாட்டு இளைஞர்களுக்கிடையிலான சீரிய உறவுப் பரிமாற்றத்திற்கான பொறிமுறையினை உருவாக்குவது மற்றும், இருநாட்டு மக்களுக்கிடையிலான உறவுப் பரிமாற்றத்தை விரிவுபடுத்துதல், சீனாவின் உதவியுடன் இலங்கையில் சீன மொழி கற்பதற்கான நிலையத்தினை ஆரம்பித்தல், சீனாவின் கலாசார நிலையத்தினை இலங்கையில் நிறுவுதல் என்பவைகளை இருநாடுகளும்வரவேற்றிருந்தன. உல்லாசப் பிரயாணம், சமயம், கலாசார மரபுகளைப் பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்துதல் என்பவைகளைக் கூட்டாகப் பேணுதலும் தரம் உயர்த்துதலும்.
5. பிராந்திய மற்றும்சர்வதேச விவகாரங்களை இணைத்தலும் உறுதியாகப் பரிமாறுதலும், மாறும் சர்வதேசச் சூழல் மரபுசாராத பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் பூகோள விவகாரங்களை எதிர்கொண்டு சமாளித்தல், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நலன்கள், உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற விடயங்களை இருநாடுகளும் வரவேற்றுக் கொண்டன. மேலும் சார்க் அமைப்புடன் சீனா ஆழமான கூட்டுறவினைப் பேணுவதற்கு இலங்கையின் ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

இவற்றினை விட அம்பாந்தோட்டையில் கைத்தொழில் வலயத்தினை உருவாக்கு வதற்கும், செயற்கைக்கோள் தொடர்பாடல், விண்வெளி ஆராய்ச்சி, கடல்சார்ந்த கைத்தொழில் போன்றவற்றினை அபிவிருத்தி செய்யத் சீனா தயாராக இருப்பதாகச் சீனாவின் பிரதமமந்திரி லி கிகுய்ங் (Li Keqiang) இலங்கை ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கு வரி விதிக்காமல் சீனச்சந்தையில் விற்பனை செய்வதற்குச் சீனாவிடம் இலங்கை அனுமதி கோரியுள்ளது. தேயிலை, இரத்தினக்கற்கள், தங்க ஆபரணங்கள், வாசனைப்பொருட்கள் போன்ற இலங்கையின் உற்பத்திப் பொருட்களை சீனாவில் சுதந்திரமாக விற்பனை செய்வதற்குச் சுதந்திரவர்த்தக உடன்படிக்கை (Free Trade Agreement -FTA) உதவும் என இலங்கை எதிர்பார்ப்பதுடன்,

இதன்மூலம் இலங்கைக்கு ஏற்படும் வர்த்தகச் சமமின்மையினைக் குறைக்க முடியும் எனவும் இலங்கை எதிர்பார்க்கிறது. எனவே 2017 ஆம் ஆண்டு இலங்கை சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவு ஏற்பட்டு அறுபதாவது ஆண்டு நிறைவடைகிறது. இதனை நினைவுகூரும் வகையில் இருநாடுகளுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகவுள்ளது எனக் கூறலாம்.

**6. சீனாவின் பிராந்திய நலன்கள்**

சீனாவின் பொருளாதார விஸ்தரிப்பும், பூகோளரீதியான இராணுவ வளர்ச்சியும், செல்வாக்கும் சீனாவின் ஏகாதிபத்திய உணர்வினை அல்லது புதியகாலனித்துவ உணர்வினை உலகிற்கு எடுத்துக் காட்டுகின்றது. ஆயினும் இதற்கான சமூகத், தொழில்நுட்பக் கட்டமைப்பு வலிமைக்கான கேள்வி (Demand) சீனாவிற்கு பெரும் சவாலாக உள்ளது. இந்துசமுத்திரப்பிராந்தியத்தில் பொருளாதார முதலீடுகள் பலவற்றை சீனா செய்துள்ளதால் இப்பிராந்தியம் தந்திரோபாய ரீதியில் சீனாவிற்கு முக்கியமானதாகும். கைத்தொழில் துறைக்குத் தேவையான சக்திவளத் தேவையில் ஏறக்குறைய 82 சதவீதமான எண்ணெய் மற்றும் இயற்கை வாயு என்பவற்றை இந்துசமுத்திரப் பிராந்தியத்தினூடாக சீனா இறக்குமதி செய்கிறது. கடல் வர்த்தகத்தில் ஈடுபடும் சீனக் கப்பல்களில் 30 சதவீதமான கப்பல்கள் இந்துசமுத்திரத்தின் ஊடாகவே பயணிக்கின்றன. தனது கைத்தொழில் துறைக்குத் தேவையான மூலப் பொருட்களை ஏற்றுமதி செய்யவும், உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தவும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தடையற்ற, பாதுகாப்பான வர்த்தகக் கடல்பாதையினை உருவாக்க சீனா விரும்புகிறது (Sanjive:2015). பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஜேர்மனியும், இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்காவும் எழுச்சியடைந்தது போன்று இருபத்தியொராம் நூற்றாண்டில் ஆசியாவில் சீனாவும் அரசியல், பொருளாதார இராணுவத் துறைகளில் மிக வேகமாக எழுச்சியடைந்து வருகின்றது (Christopher:2006). இதனால் இந்துசமுத்திரப் பிராந்தியக் கடற்பரப்பில் அதிக கூடிய நன்மைகளைப் பெறுவதற்குச் சீனா தீவிரமாகப் போராடி வருகின்றது. பனிப்போர்க் காலப்பகுதியில் சீனா தனது கடலாதிக்கத்தினை நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள துறைமுகங்களூடாக வலுப்படுத்தியிருந்தது. சீனாவின் வெளிநாட்டு வர்த்தகத்திற்குக் கடல்வழிப் போக்குவரத்து முக்கியமானது. ஆகவே இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கடல்வழித் தொடர்பாடல் வலைப்பின்னலை உருவாக்குவது சீனாவிற்கு அவசியமானதாகும்.

சீனாவிற்கான எரிபொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் இந்து சமுத்திரத் தினைக்கடந்து மலாக்கா நீரிணையூடாகவே செல்கின்றன. இதனால் மலாக்கா நீரிணை எப்போதும் நெரிசலடைந்தே காணப் படுகின்றது. இந்நெரிசலைப் பயன்படுத்திக் கடற்கொள்ளையர்கள், பயங்கரவாதிகள் கப்பல்களை கொள்ளையிடுதல் இப்பாதையில் சாதாரணமாக நிகழ்கின்றன (Mokhzani Zubir:2005). சர்வதேசக் கடல் அலுவலகம் (Maritime Bureau) தனது வருடாந்த கடற்கொள்ளை தொடர்பான அறிக்கையில் 2004ஆம்ஆண்டில்38கடற்கொள்ளைச்சம்பவம் மலாக்கா நீரிணைப் பகுதியில் நடந்துள்ளதாக கூறுகின்றது (Nazery Khalid:2006.06.01). இதனால் இக்கடற் பிராந்தியங்களின் கப்பல் போக்குவரத்து பெரும் அச்சுறுத் தலுக்குள்ளாகியுள்ளது. மலாக்கா நீரிணை சீனாவுடன் இணைந்திருக்கக்கூடிய கடல்வழிப் பாதையாகும். ஆனால் சீனாவின் கடல்

ஆட்சி வீச்சிற்குள் இந்நிரிணை இல்லாததால் சீனா மக்கள் இராணுக் கடற்படையினால் இக்கடற் கொள்ளைகளைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இந் நிலையில் கடல் வழித் தொடர்பாடல் அதிகாரத்தினைத் தன்வசப்படுத்தக் கூடிய வகையில் கடல் வழித் தொடர்பாடல் வலைப்பின்னலை சீனா உருவாக்கி வருகின்றது. மத்தியகிழக்கு, ஆபிரிக்கா போன்ற பிராந்தியங்களிலிருந்து தனது கைத்தொழிற்துறைக்குக் கிடைக்கும் சக்திவளத்தினைப் பாதுகாக்க வேண்டிய தேவை சீனாவிற்குள்ளது. இதனால், மடக்கஸ்கார், பொலிவியாஸ், சிச்ஏல்ஸ், மாலைதீவு, இலங்கை, வங்காளதேசம், மியன்மார் போன்ற நாடுகளுடன் சீனா படிப்படியாக இராணுவ கடற் பிராந்திய தொடர்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகளுக் கிடையில் இராஜதந்திர, நிதி மற்றும் முதலீடு, பொருளாதார, இராணுவக் கூட்டுறவினை உருவாக்குவதன் மூலம் இப்பிராந்தியம் முழுவதிலும் முதன்மையான பொருளாதாரப் பங்காளராகதன்னைநிலைப்படுத்திக்கொள்ளச் சீனா முயற்சிக்கின்றது எனலாம். இதற்காகப் பட்டுவீதித்திட்டத்தின்மூலம்ஆசிய நாடுகளை ஒன்றிணைப்பது சீனாவின் கனவாகும். ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஒன்றை சீனா நிறுவியுள்ளது. இவ்வங்கியூடாக தனது எதிர்கால கனவையடைய தேவையான நிதிகளை வழங்குவதற்குச் சீனா தயாராகி விட்டது. உலகில் பொருளாதார வளம் குறைந்த நாடுகளைக் கொண்ட பிராந்தியங் களில் தெற்காசியாவும் ஒன்றாகும். தெற்காசியப்பிராந்திய நாடுகளிற்குள் நிலவும் அரசியல் பதட்டம், அடையாளங்களைப் பாதுகாக்கின்ற அரசியல் கொள்கைகள், போக்குவரத்து வலைப்பின்னல் இல்லாமை, இறுக்கமான குடிவரவு குடியகல்வுச் சட்டங்கள், சுங்கத்தீர்வுகளில் காணப்படும் தெளிவின்மை போன்ற பல காரணங்களினால் பொருளாதாரம், முதலீடு மற்றும் வர்த்தகம் போன்றவற்றின் ஊடான சிறந்த நல்லுறவை உயர்நிலையில் பேணுவதில் இப்பிராந்திய நாடுகள் தோல்வியடைந்துள்ளன. சார்க் அமைப்பு, தெற்காசிய விருப்பு வர்த்தக ஏற்பாடுகள், தெற்காசிய சுதந்திர வர்த்தக ஏற்பாடுகள் எதிர்பார்த்த வெற்றிகளை இதுவரை தரவில்லை எனக் கூறலாம். இச் சூழலைத் தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ள விரும்பிய சீனா தெற்காசிய நாடுகளில் பிரதானமாக பாக்கிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, மாலைதீவு, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுடன் ஆழமான தந்திரோபாயக் கூட்டுப் பங்காளர் உறவினைப் பேணத் தொடங்கியுள்ளது. இதன் தொடர்ச்சியாக ஏறக்குறைய ஐந்து வருடங்களுக்குப் பின்னர் சீனாவின் உள்நாட்டு உயர் பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவராகிய சூ யங்கங் (Zhou Yongkang) ஆப்கானிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பரஸ்பரப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டார். அமெரிக்கா தலைமையிலான படைகள் 2014 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறிய பின்னர் அயல்நாடுகள் ஆப்கானிஸ்தானின் மீது தமது செல்வாக்கினை விஸ்தரிக்கக் காத்திருக்கின்ற இத்தருணத்தில், 2012 ஆம் ஆண்டு ஆனி மாதம் பீஜிங்கில் நடந்த பிராந்திய மகாநாட்டில் இரு நாட்டுத் தலைவர்களும் தமது நாடுகளுக்கிடையில் தந்திரோபாயக் கூட்டுப்பங்காளர் உறவினை இறுக்கமாகப் பேணுவது எனத் தீர்மானித்துள்ளனர். சீனாவுடன் ஆப்கானிஸ்தான் செய்துள்ள இப்புதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 300 ஆப்கானிஸ்தான் காவல்துறையினருக்கு பயிற்சி வழங்கவும், ஆப்கானிஸ்தானிலுள்ள வளமுள்ள பிரதேசங்களில் சீனா முதலீடு செய்யவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. எனவே தெற்காசியாவில் தனது முதலீடுகளுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவை

சீனாவிற்குள்ளது. இதற்காக நட்புறவுரீதியான பரிமாற்றங்கள், கூட்டுறவு என்பவைகளைத் தெற்காசிய நாடுகளுடன் சீனாவின் இராணுவம் பேணிவருவதுடன், இதற்கூடாகப் பிராந்தியத்தின் பாதுகாப்பு, உறுதித்தன்மை என்பவைகளைப் பேணவும் விரும்புகின்றது எனக் கூறமுடியும்.

### 7. முன்னோக்கிச் செல்லுதல்

சீனாவின் பிரதான கடல்வழிப் பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கையின் கிழக்குக் கடற்கரையில் தமிழீழ விடுதலைப்புலிகள் நிலைகொண்டிருந்ததுடன் சர்வதேச நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் வகையில் கடற்படையினையும் (கடற்புலிகள்) கட்டமைத்திருந்தது. இந்துசமுத்திரக் கடல்வழித் தொடர்பாடலுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்புபட்டிருப்பது சட்டவிரோதமானதும், அச்சுறுத்தலான செயலாகவும் சீனாவினால் நோக்கப் பட்டதுடன், இலங்கையின் கிழக்குக் கடலில் தனது சுதந்திரமான செயற்பாட்டையும் சீனா விரும்பியது. எனவே இந்து சமுத்திரப் போக்குவரத்துப் பாதையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தனக்கு இருக்கும் அச்சுறுத்தல்களையும், தடைகளையும் அகற்றுவற்கு இலங்கையுடன் இராணுவ ரீதியில் கைகோர்க்க சீனா விரும்பியது. எனவே சீனாவின் உதவியுடனேயே தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கையினால் தோற்கடிக்க முடிந்தது எனலாம். மரபுசார் பாதுகாப்பு மற்றும் தகராறுகளை இணைந்து தீர்த்தல் என்பதனூடாகச் சர்வதேசப் பயங்கரவாதத்திற்கு எதிரான கூட்டுச் செயற்பாடுகளை இலங்கையுடன் இணைந்து சீனா முன்னெடுத்து வருகிறது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் நீண்டகாலமாக இருந்து வந்த கூட்டுறவும், இந்தியா தெற்காசியப் பிராந்தியத்தில் காலம் காலமாகச் செலுத்தி வந்த அதிகாரமும் சீனாவின் செயற்பாட்டினால் குழப்பமடைவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆயினும், இலங்கையின் மிகவும் நட்புநாடுகளாகிய இந்தியாவும் சீனாவும் தமக்கிடையில் நடாத்தும் போட்டியில் ஒருவர் தோல்விடைந்து மற்றவர் வெற்றியடைய இலங்கை உதவிசெய்யாது நடுநிலை வகிக்க அல்லது பார்வையாளராக இருக்க முயற்சிக்க வேண்டும். ஆனால் இலங்கையின் இறைமை, சுயாதிபத்தியம், தன்னாதிக்கத்தை சர்வதேசளவில் பாதுகாப்பதற்கும், பொருளாதார அபிவிருத்தியை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் மூலதனத் திரட்சியுள்ள சீனாவின் ஆதரவு இலங்கைக்கு தேவையாகும். இந்நிலையில் பார்வையாளராக இருப்பது இலங்கைக்கு கடினமானதாகும். உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் பெருந்தெருக்கள், புகையிரதப்பாதைகள், துறைமுகங்கள், மின்உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றைச் செப்பனிடுவதிலும், அபிவிருத்தி செய்வதிலும் சீனா முன்னிலை வகிக்கின்றது. உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் துரித பொருளாதார அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்கான உதவியை சீனா வழங்கி வருகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கான உதவிகளை எங்கிருந்து பெறுவது என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் இலங்கையிடமேயுள்ளது. இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவு அறுபது ஆண்டுகால பழைமையானதுடன், மிகவும் முக்கியமானதுமாகும். இவ் இராஜதந்திர உறவின் பிரதான நோக்கம் இலங்கையின் அபிவிருத்திக்கான வாய்ப்புக் களைத் தேடிக்கொள்வதாகும்.

சீனாவின் பிரதான இலக்கு இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளைப் பலப்படுத்துவதன் மூலம் பிராந்தியத்தின் பாதுகாப்பு, சமாதானம், தந்திரோபாய சமனிலை என்பவற்றைப் பாதுகாப்பதாகும். எனவே இலங்கைக்கு எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய எல்லா ஆபத்துக்களையும் அல்லது பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகளையும்

சீனா நேரடியாகக் கையாளத்தயாராக இருப்பதுடன், தெற்காசிய நாடுகளின் பாதுகாப்பினையும், அபிவிருத்தியையும் சீனா தனது கையிலெடுத்துள்ளது. சீனாவின் தேசிய பலமும், சர்வதேசச் செல்வாக்கும் குறிப்பிடக்கூடியளவிற்கு வளர்ந்திருந்தாலும், இலங்கையின் பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்குச் சீனா செய்யும் முதலீடுகள் தொடர்பாகப் சர்வதேசளவில் பலமான சந்தேகம் நிலவுகின்றதை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. சர்வதேச நாடுகள் இதனை சீனாவின் பயமுறுத்தல் கோட்பாடு (China Threat Theory) என பிரச்சாரம் செய்கின்றன. எதிர்காலத்தில் ஆசிய பசுபிக் சமுத்திரத்தில் சீனா யுத்தம் ஒன்றை நடாத்த வேண்டிய தேவையேற்பட்டால் இலங்கை இவ்யுத்தத்தில் பிரதான தளங்களில் ஒன்றாகச் சீனாவிற்குப் பயன்படும்என்பதும், விரைவாகப் படைகளை முன்நகர்த்துவதற்கு இலங்கையில் அபிவிருத்தி செய்யப்படும் பெருந்தெருக்கள் உதவும் எனவும் கருதப்படுகின்றது. இதற்கு வலுச் சேர்ப்பது போல் இலங்கையுடன் சீனா அறுபது வருடகாலமாக இறுக்கமான இராஜதந்திர உறவுகளைப் பேணி வருகின்றது. சீனா தொடர்ந்தும் இலங்கையுடன் எல்லாவகையான கூட்டுறவினையும், நட்புறவினையும், பரஸ்பர ஆதரவினையும் மேலும் ஆழமாக வளர்க்க விரும்புகின்றது. எனவே சமகால இலங்கை சீன உறவானது மாறும் சர்வதேசச் சூழலை எதிர்கொண்டு தமக்கிடையில் இறுக்கமான நல்லுறவினை மேலும் வளர்த்துச் செல்கின்றது எனக் கூறலாம். பலமடையும் சீனாவின் அதிகார வலுவினைச் சிதைக்கின்ற வல்லமை இப்போது யாரிடமும் இல்லை என்பதும், தெற்காசியப் பிராந்திய அதிகாரச் சமனிலையில் மாற்றம் நிகழ்ந்துள்ளது என்பதுமே உண்மையாகும். இலங்கையின் கொள்கை வகுப்பாளர்கள் அதிகாரச் சமனிலை மாற்றத்தைக் கருத்தில் கொண்டு சிறப்பாகச் செயற்படுகின்றனர் எனக் கூறலாம்.

## References


1. Asian Tribune, 2013.06.05, **Sri Lanka – China relations elevated to a Strategic cooperation partnership**, URL Available on http://www.asiantribune.com/node/62759
2. Bhatia, 2016.04.24, **China, India tussle for influence as Sri Lanka seeks investment,** CNBC LLC, URL Available on http://www.cnbc.com/2016/04/24/global-opportunities-china-india-tussle-for-influence-as-sri-lanka-develops.html
3. Christopher J. Pehrson, 2006, **String of Pearls: Meeting the Challenge of China's Rising Power across the Asian Littoral,** Available on http://www.strategicstudiesinstitute.army.mil/pdffiles/PUB721.pdf
4. Colombo Page News Desk, Sri Lanka, 2016.10.21, **China agrees to provide Rs. 2.6 billion worth military assistance, OPV to Sri Lanka,** URL Available on http://www.colombopage.com/archive_16B/Oct17_1476685629Ch;.php
5. Colombo Page News Desk, Sri Lanka, 2012.09.18, **Sri Lanka, China sign 16 new agreements,** URL Available on http://www.colombopage.com/archive_12A/Sep18_1347951995Ch;.php

6. Diven,2016, **Superpowers and Small States: U.S., China, and India Vie for Influence in Sri Lanka,** URL Available on https://ecpr.eu/Filestore/PaperProposal/7612c9b7-7bc8-40a3-aa78-a190b9ce9069.pdf
7. Hariharan.R, **Chinese Defence Minister's Visit to Sri Lanka: An Indian Perspective**, Colombo Telegraph, 2012, September 11, URL Available on https://www.colombotelegraph.com/index.php/chinese-defence-ministers-visit-to-sri-lanka-an-indian-perspective/
8. International Crisis Group, **India and Sri Lanka After the LTTE**, Asia Report N°206 – 23 June 2011, URL Available on https://d2071andvip0wj.cloudfront.net/206-india-and-sri-lanka-after-the-ltte.pdf
9. Jamestown Daniel Kostecka, **The Chinese Navy's Emerging Support Network**, Defence & Arms, China Brief 2010.07.22, URL Available on http://www.ocnus.net/artman2/publish/Defence_Arms_13/The-Chinese-Navy-s-Emerging-Support-Network_printer.shtml
10. Jamestown Daniel Kostecka , **The Chinese Navy's Emerging Support Network in the Indian Ocean**, Naval War College Review, Winter 2011, Vol. 64, No. 1, URL Available on http://www.dtic.mil/dtic/tr/fulltext/u2/a536636.pdf
11. Joint Press **Communique of the People's Republic of China and the Democratic Socialist Republic of Sri Lanka,** 2007.03.10, Ministry of Foreign Affairs, the People's Republic of China, URL Available http://www.fmprc.gov.cn/mfa_eng/wjdt_665385/2649_665393/t303108.shtml
12. **Joint Press Communiqué of the Foreign Ministers of China and Sri Lanka**,2006.07.16, Embassy of the People's Republic of China in Sri Lanka, URL Available on http://lk.chineseembassy.org/eng/zgxw/t263307.htm
13. Jonas Lindberg, Camilla Orjuela, Siemon Wezeman and Linda Åkerström, 2011,**Arms Trade with Sri Lanka - Global Business, Local Costs**, The Swedish Peace and Arbitration Society, Stockholm, Sweden, URL Available on http://www.svenskafreds.se/sites/default/files/arms-trade-with-sri-lanka_0.pdf
14. Ministry of Foreign Affairs Sri Lanka, 2012.09.19, **Visit by Wu Bangguo, China's top legislature to Sri Lanka heightens the momentum of Sri Lanka – China Bilateral Relations**, URL Available on http://www.mfa.gov.lk/index.php/en/media/news-archive/3629-visit-by-wu-bangguo-chinas-top-legislature-to-sri-lanka-heightens-the-momentum-of-sri-lanka-china-bilateral-relations-
15. Mokhzani Zubir and Mohd Nizam Basiron, 2005,**The Straits of Malacca: the Rise of China, America's Intentions and the Dilemma of the Littoral States**, Available at, http://www.southchinasea.org/docs/Zubir%20and%20Basiron,%20Malacca,%20America,%20and%20China-MIMA%20Online.pdf

16. Nazery Khalid,2006.06.01, **Security in the Straits of Malacca**, The Asia- Pacific Journal: Japan Focus, Available on http://www.japanfocus.org/-Nazery-Khalid/2042
17. Restoration of the lawful rights of the People's Republic of China in the United Nations, **United Nations General Assembly Resolution 2758**, 1976th plenary meeting, 25 October 1971,URL Available on http://china.usc.edu/sites/default/files/legacy/AppImages/1971-UN-China-seating.pdf
18. Sanjive Sokinda,2015, **India's Strategy for Countering China's Increased Influence in the Indian Ocean,** The Centre for Defence and Strategic Studies (CDSS), Australian Defence College, URL Available on http://www.defence.gov.au/ADC/Publications/IndoPac/Sokinda_IPS_Paper.pdf
19. Sergei De Silva-Ranasinghe, Sri Lanka - The New Great Game, The Diplomate, October 28,2009, URL Available on http://thediplomat.com/2009/10/sri-lanka-the-new-great-game/?allpages=yes
20. **Sri Lanka, China strike defense cooperation deal**, 2014.09.17, India post, URL Available on http://www.indiapost.com/sri-lanka-china-strike-defense-cooperation-deal/
21. Sri Lanka Guardian, 2016.05.15, **China, Sri Lanka and politics of Indian Ocean**, URL Available on http://www.slguardian.org/2016/05/china-sri-lanka-and-politics-of-indian-ocean/
22. The Economics Times, 2016.04.05, **Colombo Port city project to be given special status: Sri Lanka PM Ranil Wickramasinghe,** URL Available on http://economictimes.indiatimes.com/news/international/world-news/colombo-port-city-project-to-be-given-special-status-sri-lanka-pm-ranil-wickramasinghe/articleshow/51698966.cms
23. Waidyanatha.W.G.S, **Rational for Liberalaization of Sri Lankan Economy- Some Milestones,** Economic Review, A Peoplel's Bank Publication, April/ June,2001.
24. World Investment **Report 2016**, Investor Nationality: Policy Challenges, United Nations Conference on Trade and Development (UNCTAD), Country fact sheet: Sri Lanka, URL Available on http://unctad.org/sections/dite_dir/docs/wir2016/wir16_fs_lk_en.pdf
25. Xi Jinping **Meets with President Mahinda Rajapaksa of Sri Lanka**, 2014/05/22, Ministry of Foreign Affairs, the People's Republic of China, URL Available on http://www.fmprc.gov.cn/mfa_eng/zxxx_662805/t1159605.shtml